بسم الله الرحمن الرحيم

# ஜுமுஆ பேருரை

*அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்*

*(அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் - அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)*

*பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 10.04.2015 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்*

---

தஷஹ்ஹுத், தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

قَدْ أَفْلَحَ الْمُؤْمِنُونَ ۝١ الَّذِينَ هُمْ فِي صَلَاتِهِمْ خَاشِعُونَ ۝٢

நம்பிக்கையாளர்கள் நிச்சயமாக வெற்றி பெற்றனர். அவர்கள் தங்கள் தொழுகைகளில் பணிவுடன் உள்ளனர். **(23:2,3)**

இந்த வசனங்களில் முதல் வசனத்தில் அல்லாஹ் قَدْ أَفْلَحَ الْمُؤْمِنُونَ என்று கூறி நம்பிக்கையாளர்களின் வெற்றி தொடர்பான உறுதியான நற்செய்தியை வழங்கியுள்ளான். ஆனால் அந்த நம்பிக்கையாளர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பது தொடர்பாக அடுத்து வரும் வசனங்களில் அதுபற்றிய நிபந்தனைகள் விளக்கிக் கூறப்பட்டுள்ளன. இந்த நிபந்தனைகளுக்கேற்ப வாழ்கின்ற நம்பிக்கையாளர்களே வெற்றி பெறுபவர்கள் என்று கூறப்பட்டுள்ளது. இந்த நிபந்தனைகளில் அல்லது ஒரு நம்பிக்கையாளர்களுக்கு இருக்க வேண்டிய பண்புகளில் முதலாவது தனிச்சிறப்புமிக்க பண்பாக அல்லது நிலைமையாக فِي صَلَاتِهِمْ خَاشِعُونَ அவர்கள் தங்கள் தொழுகைகளில் பணிவை வெளிப்படுத்துவர் என்று கூறப்பட்டுள்ளது.

காஷிஃ என்ற சொல்லிற்கு தொழுகைகளில் அழுது மண்றாடுபவர் என்று பொதுவாக பொருள் கொடுக்கப்படுகின்றது. ஆனால் இதற்கு வேறு பொருள்களும் உள்ளன. இந்த எல்லா பொருள்களும் பூர்த்தியாகாத வரை ஒரு நம்பிக்கையாளருக்குரிய உண்மையான தரத்தின் நிலை உருவாக முடியாது. அகராதி பொருள்களின் அடிப்படையில் இதற்கு அளவு கடந்த பணிவை கடைபிடிப்பது, தன்னை மிகவும் தாழ்த்திக் கொள்வது, தனது நஃப்ஸை அழித்து விடுவது, தாழ்மை குணத்தை மேற்கொள்வது, தன்னைத் தானே குறைந்த நிலையில் உள்ளவராக ஆக்க முயற்சி செய்வது, பார்வையை கீழ் நோக்கி வைப்பது, குரலை மெல்லியதாக வைப்பது மற்றும் குரலை தாழ்த்திக் கொள்வது ஆகிய பொருள்கள் இதற்கு இருக்கின்றன.

பாருங்கள். இந்த ஒரு சொல்லில் ஒரு உண்மையான மூஃமினின் தொழுகை மற்றும் இறைவணக்கம் தொடர்பாக எத்தகைய விரிவான வரைபடம் தரப்பட்டுள்ளது. எந்த மனிதன் இறைவனுக்கு முன்னால் தனது இறைவணக்கத்தின் இந்த தரத்தை பெறுவதற்காக குனிந்து விடுவானோ, தனது பணிவை அதன் இறுதி எல்லை வரை எட்டும்படி செய்வானோ, தனது நஃப்ஸை இறைவனது திருப்தியைப் பெறுவதற்காக அழித்து விடுபவராக இருப்பாரோ மற்றும் இங்கு கூறப்பட்டுள்ள ஏனைய சிறப்பான விஷயங்களையும் பின்பற்றி நடப்பானோ பிறகு ஒருபக்கம் அவர் இறைவனுடைய நெருக்கத்தைப் பெறுவதுடன் மறுபக்கம் நான் இறைவனுக்குரிய உரிமையை செலுத்துவதுடன் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கேற்ப படைப்பினங்களுக்குரிய உரிமையையும் செலுத்த வேண்டும் என்பதன் பக்கமும் அவர் கவனம் செலுத்துவார்.

பிறகு அவரது இந்த தொழுகைகள் அவரது உலக விவகாரங்களையும் சரி செய்யக் கூடியவையாக ஆகிவிடும். பிறகு அவர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியதற்கேற்ப **பத்தர் பனோ ஹர்எக்ஸே அப்னி ஹயால் மே – ஷாயித் கே இஸ்ஸே தஹல் ஹோ தாருல் விஸால் மே** தனது எண்ணத்தில் எல்லோரையும் விட உங்களை மோசமானவராக கருதிக் கொள்ளுங்கள். ஒருவேளை இதன் மூலமாக இறை சந்திப்பு கிடைத்து விடலாம் என்ற கவிதையின் வடிவமாக ஆகுவதற்கு அவர் முயற்சி செய்வார். இவ்வாறு ஆகுவதற்கு முயற்சி செய்தவாறு தனது தற்பெருமை மற்றும் தன்னை பெரிதாக காட்டுகின்ற விஷயங்களிலிருந்து விடுபட முயற்சி செய்தவாறு தனது உலக விவகாரங்களையும் சரி செய்து கொள்வார். அல்லது சரி செய்ய முயற்சி செய்வார். வெட்கத்தின் காரணமாக தனது பார்வையை கீழ்நோக்கி வைத்தவாறு வெறும் தொழுகையின் நிலைமையின் போது மட்டுமல்லாமல் அன்றாட வாழ்வின் பல சந்தர்ப்பங்களிலும் அதை கடைபிடித்து சமுதயாத்தில் நிலவும் எண்ணற்ற தீமைகளிலிருந்து தவிர்ந்து கொள்ள அவர் முயற்சி செய்வார்.

தனது குரலை தாழ்த்திக் கொள்பவர் எங்கு இறை வணக்கம் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வாரோ அங்கு அவர் அன்றாட வாழ்விலுள்ள விவகாரங்களிலும் கூட கூச்சலிடுவதிலிருந்தும், சண்டை சச்சரவுகளில் ஈடுபடுவதிலிருந்தும் பாதுகாப்பாக இருப்பார். அல்லது பாதுகாப்பாக இருப்பதற்கு முயற்சி செய்வார். அன்றாட வாழ்வுடன் தொடர்புள்ள பல தீமைகளையும் தனது தொழுகைகள் மற்றும் இறைவணக்கத்தின் காரணமாக ஒரு நம்பிக்கையாளர் அழித்து விடுகின்றார்.

எனவே, அல்லாஹ் கூறுகின்றான். அத்தகைய தொழுகைகளையும் அத்தகைய தாக்கத்தை தங்கள் மீது நிலைநாட்டுகின்ற மக்களுமே வெற்றி பெறுகின்றனர். மொழியாக்கத்தில் நம்பிக்கையாளர்கள் வெற்றி பெற்றனர் என்று நான் மொழியாக்கம் செய்துள்ளேன். ஆனால் இந்த வெற்றி மிகவும் விரிவானதாகும். இந்த வெற்றியை எவ்வாறு அவர்கள் பெற்றனர் ? அகராதி அடிப்படையில் அவர்களுக்கு எளிதான நிலை ஏற்படுவது, நற்பாக்கியம் கிடைப்பது, விரிவான நிலை ஏற்படுவது, விருப்பங்கள் நிறைவேறுவது, பாதுகாப்பு கிடைப்பது, நல்ல நிலைமையும், மகிழ்ச்சியும் நிரந்தரமாக இருப்பது, வாழ்வில் அருட்கொடைகள் கிடைப்பது ஆகிய பொருள்கள் உள்ளன.

நன்மைகளை செய்யக்கூடியவர்கள் எந்த எந்த வகைகளிலெல்லாம் பயன் பெறக்கூடியவர்களாகக இருக்கின்றனர். அவர்கள் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக அந்த நன்மைகளை செய்தனர். அல்லது அல்லாஹ் அவர்கள் மீது

எவ்வாறெல்லாம் அருள் செய்கின்றான் என்பன போன்ற இந்த விஷயங்கள் எல்லாம் மனிதனின் கற்பனைக்கு அப்பாற்றபட்டதாகும். இந்த அருள்களை பெறுவதற்காக ஒரு நம்பிக்கையாளருக்கு முதலாவது படித்தரமாக மற்றும் மிக முக்கியமான படித்தராக தொழுகைகளில் பணிவை மேற்கொள்வதை இறைவன் வைத்துள்ளான். இந்த விஷயங்களைப் பெறுவதற்கு இறைவணக்கத்தை மேற்கொள்ள வேண்டும் என்பதை இறைவன் வைத்துள்ளான்.

உலகவாதிகள் கூட சில நேரங்களில் பணிவை காட்டுகின்றனர். மேலும் அழுது மன்றாடுவதைப் பொருத்தவரை சில உலகவாதிகள் சிறு சிறு விஷயங்களுக்காக எந்த அளவு அழுது மன்றாடுகின்றனர் என்றால் அதைப் பார்க்கின்ற மனிதன் வியப்படைகின்றான். எங்கு அவர்களது உலக பலன்கள் பாதிக்கப்படுகின்றதோ அங்கு அவற்றைப் பெறுவதற்காக மிகவும் இழிவானவர்களாக அவர்கள் தங்களை ஆக்கிக் கொள்வதற்கும் தயாராகி விடுகின்றனர். அல்லது அவர்களில் சிலர் தற்காலிகமாக தங்களது உணர்வுகளை வெளிப்படுத்துகின்றனர். சூழ்நிலைகளைப் பார்த்து மற்றும் சில மக்களின் நிலைமைகளைப் பார்த்து நமக்கு கருணையும் உருவாகி விடுகின்றது. அவர்களின் வேதனை நிறைந்த நிலைமையைப் பார்த்து அவர்களில் மிகுதியான உணர்வுக்கு அளாகி விடுகின்றது. ஆனால் இவையெல்லாம் அவர்களது சுய பலன்களைப் பெறுவதற்காகவே இருக்கின்றன. அல்லது உலகிற்கு காட்டுவதற்காக இருக்கின்றது. அல்லது ஒரு தற்காலிக மற்றும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஏற்படும் உணர்வின் அடிப்படையில் அவர்களின் இந்த நிலை இருக்கின்றது.

இவையெல்லாம் இறைவனின் திருப்தியைப் பெறுவதற்காக இருப்பதில்லை. இறைவனது திருப்தியைப் பெறக் கூடியவர்கள் இத்தகைய வெளிப்படையான விஷயங்களிலிருந்தும் வெகு தொலைவில் இருப்பர். உலகவாதிகளின் உணர்வுகள் தொடர்பாகவும் அல்லது தற்காலிகமாகவும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் உணர்வை வெளிப்படுத்தியவாறு அழுது மன்றாடுதலை வெளிப்படுத்துபவர் தொடர்பாகவும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறியுள்ளார்கள்.

இத்தகைய பல ஃபகீர்மார்களையும் நான் எனது கண்களால் கண்டுள்ளேன். அவர்களைப் போன்ற வேறு சில மக்களையும் நான் பார்க்க நேர்ந்தது. ஒரு உருக்கமான கவிதை பாடப்படும் போது அல்லது வேதனை நிறைந்த காட்சியைப் பார்க்கும் போது அல்லது மிகவும் வேதனை நிறைந்த கதையைக் கேட்கும் போது எவ்வளவு விரைவாக அவரிடமிருந்து கண்ணீர் துளிகள் விழுகின்றன என்றால் சில மேகங்கள் அந்த அளவுக்கு வேகமாக தனது பெரும் பெரும் துளிகள் பொழியும் போது இரவில் வெளியில் தூங்கக் கூடியவர்களுக்கு அவர்கள் தங்களது படுக்கைகளை ஈரமாகாமல் சுருட்டிக் கொண்டு போவதற்குரிய நேரத்தை கூட அது அவர்களுக்கு வழங்குவதில்லை. அதாவது எவ்வாறு மழை ஒரு நொடியில் வந்து விடுகின்றதோ அவ்வாறே இவர்களது கண்ணீரும் உடனடியாக வந்து விடுகின்றது. ஆனால் நான் சுயமாக சாட்சி கூறுகின்றேன். இத்தகைய நபர்களை மிகப்பெரும் சூழ்ச்சிக்காரராகவும் உலகவாதிகளை விட முன்னேறி செல்பவராகவும் நான் கண்டுள்ளேன். இவர்களில் சிலரை மிகத் தீய இயல்பை உடையவர்களாகவும், நேர்மையற்றவர்களாகவும், எல்லா வகையிலும் தீய வாழ்க்கை நடத்துபவர்களாகவும் நான் கண்டுள்ளேன். அவர்களது கண்ணீர் வடிக்கும் பழக்கத்தையும், அவர்கள் காட்டுகின்ற பணிவு, உருக்கம் ஆகியவற்றைப் பார்த்து எந்தவொரு சபையிலும் இத்தகைய பணிவையும் உருக்கத்தையும் வெளிப்படுத்துவதில் எனக்கு வெறுப்பு ஏற்படுகின்றது.

சில காட்சிகளைப் பார்த்து சிறிதும் தாமதமின்றி கண்ணீர் வடிக்கின்ற அத்தகைய மக்களும் இருக்கின்றனர். ஆனால், இது ஒரு தற்காலிக உணர்வாக இருக்கின்றது. எங்கு தங்களது சுய பலன்கள் இருக்குமோ அங்கு இதுபோன்ற நிலை உருவாகாது. தனக்கு எந்த பயனும் இல்லையென்றால் இதுபோன்ற நிலை உருவாகும். ஆனால் எங்கு தனக்கு பலன் கிடைக்குமோ அங்கு அதற்காக அவர் அநீதியும் கூட இழைப்பார். ஒருபோதும் அவரிடம் கருணை உருவாகாது. அல்லது இறைவனுக்கு விருப்பமில்லாத வேறு பல தீமைகள் அவரிடம் உருவாகி விடும். அவர்களது தொழுகைகளும், இறைவணக்கங்களும் பிறருக்கு காட்டுவதற்காகவே இருக்கும். இத்தகைய நிலை இருந்தால் பிறகு அவர்கள் வெற்றி பெற்ற நம்பிக்கையாளர்களில் ஒருவராக எவ்வாறு இருக்க முடியும் ?

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த கருத்தை விளக்கியவாறு நம்பிக்கையாளரின் இந்த நிலையை மனித பிறப்பின் பல்வேறு காலகட்டங்களுடன் ஒப்பிட்டு கூறியவாறு விளக்கிக் கூறியுள்ளார்கள். அதன் முதல் பகுதியை மட்டும் அதாவது الَّذِيْنَ هُمْ فِيْ صَلَاتِهِمْ خٰشِعُوْنَ அவர்கள் தமது தொழுகைகளில் பணிவுடன் உள்ளனர் என்பதை நான் இப்போது விளக்குகின்றேன்.

இறைவனுடைய ரஹீம் என்ற பண்புடன் மனிதன் ஒன்றியிருக்க முயற்சி செய்யாதவரை அல்லது அதை பெறாத வரை அவனது எந்தவொரு நன்மையும் நன்மையாக இருக்க முடியாது. அவ்வாறே எந்தவொரு இறைவணக்கமும் அதன் நிரந்தர அடித்தளத்துடன் இறைவணக்கமாக இருக்க முடியாது என்ற விஷயத்தை அது விளக்குகிறது. அவர் தன்னுடைய இறைவணக்கத்தை இறைவனுடன் ஒன்றி இருப்பதற்கான ஒரு வழி மட்டும் என்று தான் கருத வேண்டும். மேலும் அது இறைவனின் அருளால் தான் நடைபெறும் என்றும் கருத வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள். ஒரு நம்பிக்கையாளரின் ஆன்மீக பிறப்பின் முதல் தகுதியானது தொழுகைகளிலும் இறைவனை நினைவு கூருவதிலும் ஒரு நம்பிக்கையாளருக்கு கிடைக்கின்ற பணிவும், உருக்கமும், வேதனையும் ஆகும். உருக்கம், பணிவு, தாழ்மை குணம், ஆன்மாவின் பணிவு, துடிப்பு, தவிப்பு, வெப்பம் ஆகியவற்றை இவ்விஷயத்தில் அவர் தன்னிடம் உருவாக்க வேண்டும். ஒரு அச்சத்தின் நிலைமை தன்மீது ஏற்படுத்திக் கொண்டு கண்ணியமிக்க, கம்பீரமிக்க இறைவனின் பக்கம் தனது உள்ளத்தை குனிய வைக்க வேண்டும். இதுவே قَدْ اَفْلَحَ الْمُؤْمِنُوْنَ ۙ الَّذِيْنَ هُمْ فِيْ صَلَاتِهِمْ خٰشِعُوْنَ ۙ என்ற வசனத்தில் கூறப்பட்டுள்ளது. எவர்கள்

தங்களது தொழுகைகளிலும், இறைவனை நினைவு கூருகின்ற ஒவ்வொரு தருணத்திலும் அதாவது தொழுகையில் மட்டுமின்றி இறைவனை எப்போது நினைவு கூர்ந்தாலும் அதில் அவர்கள் பணிவையும் உருக்கத்தையும் கடைபிடிப்பர்.

உருக்கமும், வேதனையும், தவிப்பும் அவர்களிடம் இருக்கும். அத்துடன் உள்ளத்து உணர்வுடன் அவர்கள் தமது இறைவனது நினைவில் மூழ்கி இருப்பர். எனவே தொழுகைகளில் பணிவையும், உருக்கத்தையும் கடைபிடிப்பவர் மற்ற வகையில் அல்லாஹ்வை நினைவு கூருவதிலும் இதே நிலையைத் தான் தன்மீது எப்போதும் வைத்திருப்பார். அது தொழுகையில் அவரிடம் இருந்த அதே நிலையாகத் தான் இருக்கும்.

பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள். எவர்கள் திருக்குர்ஆனை சிந்திக்கின்றார்களோ அவர்கள் இதனைப் புரிந்து கொள்ள வேண்டும். தொழுகைகளில் பணிவையும், உருக்கத்தையும் கடைபிடிக்கின்ற அந்த நிலையானது ஆன்மீக பிறப்பிற்கான ஒரு விந்துத் துளியாகும். மேலும் விந்துத் துளியை ஆன்மீகமான முறையில் முழுமை பெற்ற மனிதனுக்குரிய எல்லா ஆற்றல்களும், பண்புகளும், எல்லா வடிவங்களும் இதில் மறைந்திருக்கின்றது. நான் ஏற்கனவே கூறியது போன்று மனித பிறப்பின் பல்வேறு காலகட்டங்களுடன் ஒப்பிட்டு கூறப்பட்டுள்ளதற்கு உதாரணம் கொடுக்கப்படுகின்றது.

எவ்வாறு விந்துத்துளி கருப்பையை சென்றடைந்த பிறகு குழந்தை உருவாகி பிறக்கின்றதோ. பிறகு எவ்வாறு எல்லா சிறப்பம்சங்களையும் கொண்ட முழுமை பெற்ற மனிதன் பிறக்கின்றான். இவ்வாறே பணிவு ஆன்மீக முன்னேற்றத்தின் படித்தரங்களை கடக்க வைக்கின்றது. பிறகு ஆன்மீகமான முறையில் மனிதனை அது முழுமைப்படுத்துகின்றது.

பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள். கருப்பையுடன் தொர்பு ஏற்படாத வரை எவ்வாறு விந்துள்துளி ஆபத்தில் இருக்கின்றதோ அதாவது கருப்பைக்குள் அது செல்லாத வரை அது எவ்வாறு வீணாகி விடும் அபாயத்தில் இருக்கின்றதோ – ஏனென்றால் கருப்பைக்குள் சென்ற பிறகு தான் இறைவனின் இயற்கை சட்டத்திற்கு ஏற்ப அதன் வளர்ச்சி இருக்கும். அவ்வாறே ஆன்மீக பிறப்பின் முதல் நிலையானது அதாவது பணிவின் நிலையானது ரஹீமாக இருக்கும் இறைவனுடன் அதற்கு தொடர்பு ஏற்படாத வரை அது அபாயத்தை விட்டும் வெளியில் இல்லை. எதுவரை இறைவனது அருள் மனிதனின் எந்த செயலுடனும் தொடர்பில்லாமல் வெளிப்படுகின்றதோ அது இறைவனின் ரஹ்மான் என்ற பண்பில் இருந்து வெளிப்படுவதாகும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

உதாரணமாக, வானம், பூமி போன்ற எவற்றையெல்லாம் இறைவன் மனிதனுக்காக உருவாக்கி இருக்கின்றானோ மற்றும் மனிதனை உருவாக்கினானோ இவையெல்லாம் ரஹ்மான் என்ற அவனின் பண்பின் மூலமாக தோன்றின. ஆனால் ஏதாவதொரு அருள் ஒருவரது செயல், இறைவணக்கம், முயற்சி, பயிற்சி ஆகியவற்றிற்கு பகரமாக வழங்கப்பட்டிருந்தால் அது இறைவனின் ரஹீம் என்ற பண்பின் அருளாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள். இதே அல்லாஹ்வின் நடைமுறை தான் ஆதமின் சந்ததிகளுக்காக நீடித்திருக்கின்றது. ஒரு மனிதன் தொழுகையிலும், இறைவனை நினைவு கூருவதிலும் பணிவை மேற்கொள்ளும் போது தன்னை இறைவனின் ரஹீம் என்ற பண்பிலிருந்தும் பலன் பெறுவதற்கு தகுதியுடையவராக ஆக்கிக் கொள்கிறார். எனவே, விந்துள்துளிக்கும், ஆன்மீக பிறப்பின் முதல் நிலையான பணிவிற்கும் இடையிலுள்ள வித்தியாசம் என்னவென்றால் விந்துத்துளியானது கருப்பை அதை ஈர்க்க வேண்டும் என்ற தேவை உடையதாக இருக்கின்றது. அவ்வாறே தொழுகைகளில் உள்ள பணிவு இறைவனின் பண்பாகிய ரஹீம் அதை ஈர்க்க வேண்டும் என்ற தேவை உடையதாக இருக்கின்றது. எவ்வாறு விந்துத்துளியை கருப்பை தனக்குள் ஈர்ப்பதற்கு முன்னரே அது விணாகிவிடும் சாத்தியம் இருக்கின்றதோ அவ்வாறே ஆன்மீக பிறப்பின் முதல் நிலைக்கு அதாவது பணிவின் நிலைக்கு அது இறைவனின் ரஹீம் என்ற பண்புடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதற்கு முன்னதாகவே அழிந்து போய் விடுவதற்கான சாத்தியம் உள்ளது. எனவே, வெளிக்காட்டுதலுக்காக செய்யப்படும் செயல்கள் அல்லாஹ்விடம் ரஹீமாக இருக்கும் இறைவனுடைன் அவற்றிற்கு தொடர்பு ஏற்படுவதற்கு முன்னரே அழிந்து விடுகின்றன.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியுள்ள இந்த உதாரணத்தின் மூலம் ரஹீமாக இருக்கக்கூடிய இறைவனின் ரஹீமிய்யத் என்ற பண்பு எப்போது மனிதனுடன் தொடர்பை ஏற்படுத்தி அவனை ஏற்றுக் கொண்டு அவனுக்கு கனிகளை வழங்கும் என்று எவரும் கூற முடியாது. எனவே தொடர்ந்து முயற்சி செய்வது அவசியமானதாகும். எவ்வாறு வெளிப்படையான முறையில் எப்போது கருத்தரிக்கின்றது. எப்போது குழந்தை பிறக்கும் என்பது நமக்குத் தெரியாதோ அவ்வாறே ஒரு விந்துத்துளி கருப்பைக்குள் சென்ற பிறகும் அதில் எவ்வாறு சில குறைபாடுகள் உருவாகி விடுகின்றதோ, அதாவது கருப்பைக்குள் சென்ற பிறகும் கூட எவ்வாறு விந்துத்துளியில் சில குறைகள் வந்து விடுகின்றதோ, இது என்னுடைய விளக்கமாகும். அவ்வாறே மனிதன் ஒரு முறை மேற்கொண்ட பணிவானது அவனுக்கு கனிகளை வழங்கினாலும் கூட பிறகு அதில் சில குறைகள் ஏற்பட்டு விடுகின்றன. தனது பெருமை அதில் வந்து விடுகின்றது. நபிமார்களை ஏற்றுக் கொண்டு பிறகு அவர்களை விட்டுவிட்டு செல்பவர்களின் நிலையும் இவ்வாறே இருக்கின்றது. அகங்காரம் தான் அவர்களை அந்த நன்மைகளிலிருந்து அகற்றி விடுகின்றது. அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட தூதர்களுடன் அவர்களுக்கு தொடர்பு இருக்கின்ற வரை அல்லாஹ்வுடனும் அவர்களுக்கு தொடர்பு இருக்கின்றது.

எங்கு அவர்கள் இறைத்தூதர்களுடனுள்ள தங்களது தொடர்பை விட்டு விட்டார்களோ அங்கு அவர்கள் இழிவு மற்றும் வழிகேட்டின் கிணறில் சென்று விழுந்து விட்டனர். எனவே எப்போதும் இறைவன் மீதுள்ள அச்சம் கண் முன் இருக்க வேண்டும். இறைவனது ரஹீம் என்ற பண்பிலிருந்தும் பலன் கிடைப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். அவனது

அருள்களை வேண்டிக் கொண்டே இருக்க வேண்டும். அல்லாஹ்வுடன் உண்மையான தொடர்பை ஏற்படுத்த முயற்சி செய்து கொண்டிருக்க வேண்டும். ஒரு சில முயற்சிகள் செய்து விட்டு அல்லது ஒன்று இரண்டு துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டால் அல்லது சில உண்மையான கனவுகள் வந்து விட்டால் அதில் பெருமை கொள்ளக்கூடாது. அல்லாஹ் எங்குமே உங்களது ஒரு சில துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவது அல்லது உங்களுக்கு ஒரு சில உண்மையான கனவுகள் வருவது ஆகியவை மட்டும் உங்களை வெற்றி பெற்றவர்களுடன் கொண்டு போய் சேர்த்து விடும் என்று கூறவில்லை. அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுபவர்களும் வெற்றியை பெறுபவர்களும் தங்களது பணிவு மற்றும் தாழ்மை குணத்தின் இறுதி எல்லையை அடைந்த பிறகும் கூட, வீணான விஷயங்களிலிருந்து விலகி இருந்தும் கூட, அல்லாஹ்வின் வழியில் செலவு செய்திருந்தும் கூட, தங்களது கற்புகளை பாதுகாத்துக் கொண்ட பிறகும் கூட, தங்களது உடன்படிக்கைகளை நிறைவேற்றிய பிறகும் கூட, தங்களத இறைவணக்கத்திற்குரிய உரிமையை செலுத்திய பிறகும் கூட, தங்களது தொழுகைகளுக்குரிய உரிமையை செலுத்திய பிறகும் கூட, தொழுகைகளை பாதுகாத்து வந்த பிறகும் கூட அவர்கள் இறைவா ! நீ எங்களை உனது அருளின் போர்வையால் மூடி விடுவாயாக என்றே கூறுகின்றனர். அது இல்லாமல் நாங்கள் ஒன்றுமே இல்லை என்று அவர்கள் கூறுகின்றனர்.

எனவே நான் ஏற்கனவே கூறியது போன்று நாம் நமது முடிவின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். அல்லாஹ்வின் அருள் மூலமாக அவனது ரஹீம் என்ற பண்பை ஈர்த்தவாறு நமது ஒவ்வொரு செயல் மூலமாகவும் எல்லா வகையிலும் முழுமை பெற்ற அந்த குழந்தை பிறக்க வேண்டும். இறைவணக்கத்தில் முன்னேற முன்னேற பணிவிலும் முன்னேறி செல்கின்ற அந்த மக்களில் ஒருவராக நாம் ஆக வேண்டும். தாழ்மை குணத்தை கடைபிடிப்பதில் முன்னேறுபவர்களாக நாம் ஆக வேண்டும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது இறைவணக்கத்திலுள்ள அழகையும், பணிவையும், உருக்கத்தையும் நம்மால் கற்பனை செய்து கூட பார்க்க முடியாது. அவர்களே நானும் சொர்க்கத்தில் அல்லாஹ்வின் அருள் மூலமாகவே நுழைவேன் என்று கூறியிருக்கும் போது வேறு எவர் தான் தனது செயலால் சொர்க்கத்தில் நுழைந்து விட முடியும்? அல்லது இறைவனது திருப்தியைப் பெற முடியும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் எல்லா நன்மைகளும் இருந்த பிறகும் இறைவன் அவர்களுக்கு எல்லாவிதமான உத்தரவாதம் வழங்கி இருந்தும் உலகை சீர்திருத்துவதற்காகவே அவர்கள் வந்தார்கள். அவர்களது செயல் போன்று வேற எவரது செயலும் இருக்க முடியாது. அவ்வாறிருந்தும் கூட அவர்கள் தங்களது பணிவையும், உருக்கத்தையும் எந்த அளவு அதிகமாக்கினார்கள் என்றால் அவர்களது நஃபில் தொழுகைகளில் அவர்களது கால்கள் வீங்கிவிட்ட உணர்வு கூட அவர்களுக்கு இருக்கவில்லை. அல்லாஹ்வுடைய அருள்களை ஈர்ப்பதற்காக தொடர்ந்து பணிவையும், அல்லாஹ்வின் மீதுள்ள அச்சத்தையும் ஒவ்வொருவரும் தங்கள் முன்னால் வைக்க வேண்டும்.

எனவே, ஒவ்வொரு உண்மையான மூஃமினிடத்திலும் அவர் தொழுகையை ஆரம்பிக்கும் போதுள்ள நிலைமைக்கும் அதனை அவர் முடிக்கும் போதுள்ள நிலைமைக்கும் இடையில் ஒரு தெளிவான வித்தியாசம் தென்பட வேண்டும். தொழுகையை ஆரம்பிப்பதற்கு முன்னர் அவரிடம் ஏதாவது தற்பெருமை, அகங்காரம் இருந்திருந்தால் கூட தொழுகையை முடிக்கும் போது அவரது உள்ளம் இப்படிப்பட்ட விஷயங்களிலிருந்தும் தூய்மை அடைந்திருக்க வேண்டும். இவ்வாறே மற்ற இறைவணக்கங்களும் இருக்கின்றன. ஒவ்வொரு இறைவணக்கத்தின் முடிவும் அவரது அகங்காரத்தை முடிவுக்கு கொண்டு வரக்கூடியதாகவும், பணிவை கடைபிடிக்க வைக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும். தங்கள் அன்றாட விவகாரங்களில் பரஸ்பரம் ஒருவர் மற்றவருடன் நடந்து கொள்ளும் விதம் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக உள்ளத்தில் பணிவின் நிலையை மேற்கொண்டதாக இருக்க வேண்டும்.

எனவே, இறைவணக்கங்கள் நம்மை குனிய வைக்கக்கூடியவையாக இருக்க வேண்டும். அதன் மூலமாக அல்லாஹ்வின் ரஹீமிய்யத் அதற்கு எப்போதும் வளர்ச்சி அடையக்கூடிய புத்தம் புது கனிகளை வழங்கிக் கொண்டே இருக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் அது நமது பலவீனத்தை நமக்கு சுட்டிக் காட்டியவாறு அது இறைவனது அருளை அதிகரிக்கக் கூடியதாக ஆகட்டுமாக. அல்லாஹ் நம்மை எப்போதும் இறைவனிடம் பாவமன்னிப்பு கோரக் கூடியவர்களாக ஆக்குவனாக. நமது ஒவ்வொரு நன்மையும் இறைவனின் பார்வையில் நன்மையாக இருந்தால் அது அவனது திருப்தி கிடைப்பதற்குரிய வழியாக ஆகட்டுமாக. நம்மில் ஒவ்வொருவரும் இறைவனது பார்வையில் வெற்றி பெற்றவர்களை சார்ந்தவர்களாக இருப்போமாக.

Friday Sermon delivered by Hadrath Khaleefathul Masih Alkhamis (atba)
at Baithul Futuh,London – on 10.04.15
Tamil Translation : Moulavi. M. Rafeeq Ahmed Sb
Published By Nazarath Nashr-O-Isha’ath,Sadr Anjuman Ahmadiyya - Qadian, 143516